[1981 மே 12

சென்னை கருணாநிதி நகரிலுள்ள செயற்கை அவயவங்கள் நிலையம்

"வினா எண். 1077—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கருணாநிதி நகரில் உள்ள செயற்கை அவயவங்கள் நிலையத்தில் (Artificial Limb Centre) 1978 முதல் 1980 வரை உடல் ஊனமுற்றோர் செயற்கை அவயவங்களுக்காக பதிந்து வைத்த நபர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில் எத்தனை நபர்களுக்கு அவயவங்கள் வழங்கப்பட்டன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:

(அ) சென்னை கருணாநிதி நகரிலுள்ள செயற்கை அவயவங்கள் நிலையத்தில் (H. L. C.) 1978 முதல் 1980 வரை செயற்கை அவயவங்கள் வேண்டுமென்று 1,177 நபர்கள் பதிவு செய்துள்ளனர்.

(ஆ) அதில் 576 நபர்களுக்கு இதுவரை செயற்கை அவயவங்கள் பொருத்தப்பட்டு விட்டன.

திரு. ரா. கிருஷ்ணன்: இந்த ஆண்டு ஊனமுற்றோர் ஆண்டு. ஏற்கனவே பதிவு செய்திருப்பவர்களில் பாதிப் பேர்களுக்குக்கூட இந்த செயற்கை அவயவங்கள் வழங்கப்படவில்லை என்று தெரிகிறது. ஆகவே, இந்த ஊனமுற்றோர் ஆண்டிலாவது பதிவு செய்துள்ள அத்தனை ஊனமுற்றோர்களுக்கும் இந்த செயற்கை அவயவங்கள் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இதற்கு ஏராளமான தொகை செலவாகிறது. ஒரு நபருக்கு ஏறத்தாழ ரூ. 500—ல் இருந்து ரூ. 1000 வரை செலவாகிறது. நாம் வாங்குகிற தொகை ரூ. 25 சிலநேரங்களில் அதைக் கூட வாங்க முடியாமல் இருக்கிறோம். ஆகவே இவ்வளவு தொகை செலவாவதால் இந்தச் சங்கடம் ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுமாதிரி இந்த ஆண்டிலாவது அதை கொஞ்சம் அதிகமாக, 600 பேர்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது, அதில் 300 பேர்களுக்காவது கொடுப்பதற்கு இந்த ஆண்டு ஏற்பாடு செய்யலாமா என்பதுபற்றி சிந்தித்துக்கொண்டு இருக்கிறோம், யோசனை செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. ரா. கிருஷ்ணன்: ரூ. 500-ல் இருந்து ரூ. 1000 வரை ஆகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் ஒரு மனிதபிமான உணர்வோடு, அவர்கள் வாழ்க்கையில் நொந்திருக்கிற சூழ்நிலையில், அவர்கள் அத்தனை பேர்களுக்கும் அதாவது அந்த 600 பேர்களுக்கும் உடனடியாக வழங்

க

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அரசாங்கம் இந்த ஆண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா? அந்த 600 பேர்களுக்கும் கொடுப்பதற்கு அரசாங்கம் மறு பரிசீலனை செய்து முடிப்பதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: நிச்சயமாக பரிசீலிக்கும்.

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு குமுளியில் பணிமனை கட்டும் திட்டம்

*வினா எண். 1078. திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமுளியில் பாண்டியன் போக்குவரத்துக் கழக பேருந்துகள் நிற்பதற்கு டிப்போ கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:

பாண்டியன் சாலைப் போக்குவரத்து கழகத்திற்குச் சொந்தமான பணிமனை ஒன்று ஏற்கெனவே குமுளியில் உள்ளது. அங்கு ஒரு பேருந்து நிலையம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஒன்று மேற்படி கழகத்தின் பரிசீலனையிலுள்ளது.

திரு. ஆர். டி. கோபாலன்: அங்கே பல்லவன் டிப்போ முதலில் இருந்தது. அதை இப்பொழுது பாண்டியன் போக்குவரத்துக் கழகம் எடுத்துள்ளது. ஆனால் அங்கே பேருந்துகள் நிற்பதற்கு வேண்டிய வசதிகள் இல்லை. ஆகவே அந்தப் பேருந்துகள் நிற்பதற்கு வேண்டிய வசதிகள், ஏற்பாடுகள் செய்து கொடுக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். பாண்டியன் போக்குவரத்துக் கழகம் சார்பாக அங்கே ஒரு பணிமனை இருக்கிறது. அதில் 11 பேருந்துகள் இப்போது நிற்கின்றன. ஆனால் பயணிகளை ஏற்றுவதற்காக நிறுத்தப்படுகிற பஸ்கள்—பஸ் ஸ்டாண்ட் இல்லை என்ற காரணத்தால் இப்போது பாண்டியன் போக்குவரத்துக் கழகம் அதற்காக பணத்தை ஒதுக்கி ஏறக்குறைய ஐந்து ஏக்கர் நிலம் அதற்கு தேவை. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கேட்டிருக்கிறது.

அரசுப் பேருந்துகளில் அதிகப் பயணிகளை ஏற்றிச் செல்லுவதை தடுக்கும் திட்டம்

வினா எண். 1015—திரு. த. வேணுகோபால்: மற்றும் திரு. இரா. தமரைக்கனி:— மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—